# கூட்டுறவுச் சங்கங்களின் வேலூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம்
## வேலூர் மாவட்டம்
**முகவரி – மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், சத்துவாச்சாரி, வேலூர் – 632 009.**

**இணையதள முகவரி :** www.drbvellore.net

**மின்னஞ்சல் முகவரி .** velloredrb.coop@gmail.com

**2019–ஆம் ஆண்டின் விளம்பர எண் : 2 நாள் : 30.08.2019**

வேலூர் மாவட்டத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்படும் கடன் சங்கங்களில் கீழ்க்காணும் வகை கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள உதவியாளர் மற்றும் எழுத்தர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்புவதற்காக இந்தியக் குடியுரிமையுடைய, கீழ்க்காணும் தகுதிபெற்ற ஆண்/பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் www.drbvellore.net என்ற இணையதள முகவரியில் மட்டுமே (Only Through Online Mode) **30.09.2019** வரை வரவேற்கப்படுகின்றன.

**1) கடன் சங்கங்கள் :**

| வ. எண். | வங்கி / சங்கத்தின் பெயர் | காலிப் பணியிடங்களின் விவரம் | | பணியிடத்திற்கான சம்பள விகிதம் (தற்போதுள்ளபடி குறைந்த பட்சம் அதிகபட்சம் |
|---|---|---|---|---|
| | | பதவி | எண்ணிக்கை | |
| 1. | குடியாத்தம் நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 16 | 11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 |
| 2. | பள்ளிகொண்டா நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 3 | 11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 |
| 3. | திருப்பத்தூர் நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 7 | 11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 |
| 4. | ஜோலார்பேட்டை நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 4 | 11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 |
| 5. | அரக்கோணம் நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 10 | 11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 |
| 6. | சோளிங்கர் நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 7 | 11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 |
| 7. | இராணிப்பேட்டை நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 7 | 11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 |
| 8. | ஆற்காடு நகர கூட்டுறவு வங்கி | உதவியாளர் | 2 | 11900-700/8-17500-850/4-20900-1050/11-32450 |
| 9. | பொன்னை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | உதவியாளர்/ எழுத்தர் | 1 | 12200-33580 |
| 10. | கிரிசமுத்திரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | உதவியாளர்/ எழுத்தர் | 1 | 10050-29940 |
| 11. | இராமநாயக்கன்பேட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | உதவியாளர்/ எழுத்தர் | 1 | 16000-54000 |
| 12. | சாத்தம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் | உதவியாளர்/ எழுத்தர் | 1 | 16000-54000 |
| | | **கூடுதல்** | **60** | |

**ஒட்டுமொத்த 60 காலிப் பணியிடங்களுக்கான வகுப்புவாரி ஒதுக்கீடு**

| இன ஒதுக்கீடு | கடன் சங்கங்கள் |
|---|---|
| பொதுப் பிரிவு | 18 |
| பிற்படுத்தப்பட்டோர் | 16 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் / சீர் மரபினர் | 12 |
| பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்) | 2 |
| ஆதிதிராவிடர் | 9 |
| ஆதிதிராவிடர் (அருந்ததியர்) | 2 |
| பழங்குடியினர் | 1 |
| **மொத்தம்** | **60** |

**குறிப்பு–**

1. காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டது

2.இத்தெரிவுக்கு நடைமுறையில் உள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வுக்குப் பின்பற்றப்படும் இட ஒதுக்கீடு மற்றும் இன சுழற்சி முறை ஒட்டு மொத்த நியமனத்திற்கும் பின்பற்றப்படும்

3.ஆதரவற்ற விதவை மற்றும் முன்னாள் இராணுவத்தினருக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட காலிப்பணியிடங்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016, சட்டப்பிரிவு 26(2) மற்றும் 27(C) ஆகியவற்றிற்கு உட்பட்டு நிரப்பப்படும்

4.மேற்படி சம்பள விகிதம் மற்றும் இதரப் படிகள் மேற்குறிப்பிட்ட கூட்டுறவு சங்கங்கள்/வங்கியின் பணியாளர் பணிநிலை குறித்த சிறப்புத் துணைவிதிகளுக்குட்பட்டு அமையும்.

5.தேர்வு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் அவர்களுக்கு ஒதுக்கப்படும் தொடர்புடைய கூட்டுறவு நிறுவன துணைவிதிகளுக்குட்பட்டு பணியாற்ற வேண்டும்.

6.தேர்வில் கலந்து கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்த விவரங்கள் தேர்வு நுழைவுச் சீட்டில் தெரிவிக்கப்படும்.

**1. முக்கிய நாட்களும் நேரமும் :**

| | | |
|---|---|---|
| 1. | விளம்பரம் வெளியிடப்பட்ட நாள் | 30.08.2019 |
| 2. | பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பதிவேற்றம் செய்யப்பட வேண்டிய கடைசி நாள் | 30.09.2019 |
| 3. | எழுத்துத் தேர்வு நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 15.12.2019 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

**2. தகுதிகள்**

**அ. வயது**

i) விண்ணப்பதாரர் 18 வயது பூர்த்தி அடைந்தவராக இருக்க வேண்டும் (அதாவது 01.01.2001 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்தவராக இருக்க வேண்டும்).

ii) விண்ணப்பதாரர்கள் 01.01.2019 அன்று கீழ்க்கண்ட வயதினைப் பூர்த்தி செய்தவராக இருக்கக் கூடாது.

| | | |
|---|---|---|
| 1) | ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் / சீர்மரபினர் , பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) மற்றும் இவ்வகுப்புகளைச் சார்ந்த முன்னாள் இராணுவத்தினர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் | வயது வரம்பு இல்லை. |
| 2) | பிற வகுப்பினர் (OC) | 30 வயதுக்கு மிகாமல் |
| 3) | அனைத்து இனத்தைச் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் | வயது வரம்பு இல்லை |

| | | |
|---|---|---|
| 4) | பிற வகுப்பினைச் (OC) சார்ந்த முன்னாள் இராணுவத்தினர் | 48 வயதுக்கு மிகாமல் |
| 5) | பிற வகுப்பினைச் (OC) சார்ந்த மாற்றுத் திறனாளிகள் | 40 வயதுக்கு மிகாமல் |

**<u>ஆ) கல்வித் தகுதி</u>** : ஏதேனும் ஒரு பட்டப்படிப்பு (Any Degree) (10+2+3 pattern) மற்றும் கூட்டுறவு பட்டயப் பயிற்சி.

- பல்கலை கழகங்களால் வழங்கப்படும் பட்டப் படிப்பிற்குப் பதிலாக பதினைந்து ஆண்டுகள் இராணுவத்தில் பணி புரிந்தவர்களுக்கு இராணுவத்தால் வழங்கப்படும் பட்டப் படிப்பு சான்றிதழ் பெற்றுள்ள முன்னாள் இராணுவத்தினர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால், அவர்கள் பள்ளி இறுதித் தேர்விலும் (SSLC) மேல் நிலைக் கல்வியிலும் (HSC) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கூட்டுறவு பயிற்சி பெற்றவர்கள் மட்டுமே மேற்படி உதவியாளர் நியமனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். கூட்டுறவு பயிற்சி குறித்த விரிவான விவரங்கள் அடங்கிய பதிவாளர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். 29/2013 நாள் 18.7.2013 வேலூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

- கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் 2019–2020ம் கல்வி ஆண்டில் பயிலும் முழுநேரம் / தொலைதூர பயின்று வரும் நபர்கள் இப்பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். (பதிவாளர் சென்னை அவர்களின் கடிதம் ந.க. 82862/2018 சப2 நாள்.27.08.2019)

- விண்ணப்பதாரர்கள் பள்ளி இறுதி வகுப்பு அல்லது மேல்நிலைப் படிப்பு அல்லது பட்டப்படிப்பின் போது தமிழ்மொழியை ஒரு பாடமாக படித்துத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

- கணிணி பயன்பாட்டில் அடிப்படை அறிவு பெற்றிருத்தல் வேண்டும்.

**<u>இ) பொது</u>**

- விண்ணப்பதாரர்கள் பிற மாநிலத்தவர்களாக இருக்கும் பட்சத்தில் அவர்கள் எந்தப் பிரிவைச் சார்ந்தவர்களாக இருப்பினும் பிற வகுப்பினராகவே (OC) கருதப்படுவார்.

- ‘‘ஆதரவற்ற விதவை’’ என்பது அனைத்து வழியிலிருந்தும் பெறும் மொத்த மாத வருமானம் ரூ.4,000/–க்கும் (ரூபாய் நான்காயிரம் மட்டும்) குறைவாக பெறுகின்ற ஒரு விதவையைக் குறிப்பதாகும். இவ்வருமானம், குடும்ப ஓய்வூதியம் அல்லது தொழிற்கல்வி பெற்றவர்களின் சுயதொழில் மூலம் ஈட்டும் வருமானம் உள்ளிட்ட மற்ற வருமானங்கள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாகும். இத்தகைய விண்ணப்பதாரர்கள் உரிய **<u>வருவாய் கோட்ட அலுவலர்</u>** அல்லது **<u>உதவி ஆட்சியர்</u>** அல்லது **<u>சார் ஆட்சியரிடமிருந்து</u>** நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்றிதழைப் பெற்று சமர்ப்பிக்க வேண்டும். விவாகரத்து பெற்றவர், கணவனால் கைவிடப்பட்டவர் ஆதரவற்ற விதவையாகக் கருதப்பட மாட்டார். மறுமணம் புரிந்தவர் ஆதரவற்ற விதவையாக கருதப்பட மாட்டார்.

**4. விண்ணப்பக் கட்டணம்**

**அ) விண்ணப்ப பதிவு மற்றும் எழுத்துத் தேர்வுக்கான கட்டணம் ரூ.250/– ஆகும்.**

ஆதிதிராவிடர், பழங்குடியினர், அனைத்து பிரிவையும் சார்ந்த மாற்றுத் திறனாளிகள், அனைத்து பிரிவையும் சார்ந்த ஆதரவற்ற விதவைகள் ஆகியோருக்கு இக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாற்றுத் திறனாளிகள் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலரிடமிருந்து சான்றிதழும் மருத்துவச் சான்றிதழும் பெற்றிருக்க வேண்டும். ஆதரவற்ற விதவைகள் **<u>வருவாய் கோட்டாட்சியர்</u>** அல்லது **<u>உதவி ஆட்சியர்</u>** அல்லது **<u>சார் ஆட்சியரிடமிருந்து</u>** நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் சான்று பெற்றிருக்க வேண்டும்.

1. <u>அகல் நிலை (Offline)</u>

மேற்படி கட்டணம் வேலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமையகம் அல்லது அதன் கிளைகளில் நேரடியாகச் செலுத்தப்பட்டு, அவ்வாறு செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டண இரசீதில் (Candidate's copy of the chalan) உள்ள Journal ID என்ற எண்ணை விண்ணப்பதாரர், தமது விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட்டு விண்ணப்பக் கட்டணம் செலுத்திய இரசீதை (Candidate's Copy of the pay -in - slip) scan செய்து பதிவேற்றம் (upload) செய்ய வேண்டும்.

2. <u>நிகழ் நிலை (Online)</u>

தேர்வுக் கட்டணத்தை Online மூலம் State Bank of India இணையதளத்தில் உள்ள ''SBI Collect'' என்ற சேவையைப் பயன்படுத்தியும் செலுத்தலாம். ''SBI Collect'' என்ற சேவையைப் பயன்படுத்தி விண்ணப்பக் கட்டணம் செலுத்துவதற்கான வசதி (Link to the "**SBI collect**" service in the State Bank of India Online payment portal) வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலும் கொடுக்கப்பட்டிருக்கும். Online மூலம் மேற்குறிப்பிட்டவாறு விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்தி முடித்த பின்னர் திரையில் தோன்றும் இரசீதினைப் பிரிண்ட் எடுத்துக் கொள்வதுடன் அங்கே திரையில் தோன்றும் DU............ என்று தொடங்கும் எண்ணை (SBI Collect Reference Number) குறித்து வைத்துக் கொண்டு அந்த எண்ணை விண்ணப்பத்தில் அதற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

இணைய வழி கட்டணம் செலுத்தும் போது இடர்பாடுகளுக்கும் தோல்விகளுக்கும் வேலூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

ஆ) மேற்கண்ட நடைமுறைகளைப் பின்பற்றி Online மூலம் பணம் செலுத்தும் விண்ணப்பதாரர்கள் DU......... எண்ணை பிறரிடம் பகிரக் கூடாது. அதேபோல் வேலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் Journal IDஐ பிறரிடம் பகிரக் கூடாது. ஒரே DU எண் / Journal ID எண் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களிலிருந்தால் அந்த விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை www.drbvellore.net என்ற இணையதளம் மூலம் **30.09.<u>2019</u>** வரை பதிவேற்றம் செய்யலாம்.

இ) கட்டணம் செலுத்தும் முறையை எந்த நேரத்திலும் மாற்றியமைக்கும் உரிமை வேலூர் மாவட்ட ஆள் சேர்ப்பு நிலையத்திற்கு உண்டு.

ஈ) ஒருமுறை செலுத்தப்பட்ட விண்ணப்பக் கட்டணம் எக்காரணத்தைக் கொண்டும்திருப்பித் தரப்படமாட்டாது.

**5. விண்ணப்பிக்கும் முறை**

அறிவிக்கப்பட்டுள்ள காலிப் பணியிடங்களுக்கான விண்ணப்பப்படிவம் www.drbvellore.net என்ற இணையதளம் மூலம் மட்டுமே பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவேற்றம் செய்யும் முன் கீழ்க்கண்டவற்றை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அ) விண்ணப்ப படிவங்கள் இணையதளம் மூலம் முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

ஆ) விண்ணப்பப் படிவங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவைகளும் அவற்றிற்கென ஒதுக்கப்பட்ட இடங்களில் ஸ்கேன் செய்யப்பட்டு பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.

i) விண்ணப்பதாரரின் புகைப்படம் – **50 kb** அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

ii) விண்ணப்பதாரரின் கையெழுத்து – **50 kb** அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

iii) விண்ணப்பதாரரின் சாதிச் சான்றிதழ் – **200 kb** அளவுக்கு மிகாமல் (pdf file)

iv) மாற்றுத் திறனாளிச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

v) ஆதரவற்ற விதவைச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vi) கூட்டுறவு பட்டய பயிற்சி சான்றிதழ் / 2019–2020ல் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையத்தில் பயிலும் முழு / பகுதி நேர சான்று – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

vii) வேலூர் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மூலம் செலுத்தப்பட்ட விண்ணப்ப கட்டண இரசீது (Candidate's Copy of the Pay-in – slip) – 100 kb அளவுக்கு மிகாமல் (jpeg or jpg format)

viii) முன்னாள் இராணுவத்தினருக்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

ix) இடைநிலைக் கல்வி பள்ளி இறுதி வகுப்புச் சான்றிதழ் மற்றும் மேனிலைப் பள்ளிக் கல்விச் சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

x) பட்டப்படிப்பு சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

xi) தமிழ் வழியில் பயின்றதற்கான சான்றிதழ் – 200 kb அளவுக்கு மிகாமல் (pdf file)

மேற்குறிப்பிட்ட ஸ்கேன் செய்யப்பட்ட ஆவணங்கள் பதிவேற்ற செய்யப்படாமல் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது, விண்ணப்பதாரர் தவறான தகவல்களை அளித்தால் அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

## 5. எழுத்துத்தேர்வு

அ) ஏற்கனவே பணியில் உள்ள பணியாளர்கள் இத்தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது தங்கள் நிறுவனத்தில் உரிய அலுவலருக்கு கடிதம் மூலம் தெரிவிக்க வேண்டும். மேலும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படும் பட்சத்தில் உரிய அலுவலரின் தடையில்லா சான்று (No Objection Certificate) பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி உள்ளவர்கள் மட்டுமே எழுத்துத்தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். எழுத்துத்தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பட்டியல் வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் www.drbvellore.net வெளியிடப்படும்.

எழுத்துத்தேர்வு மாவட்டத்தின், குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும். எழுத்துத்தேர்வு எந்த இடத்தில் நடைபெறும் என்பது எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டில் (Hall Ticket) குறிப்பிடப்படும். எழுத்துத்தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் (e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். எழுத்துத் தேர்வுக்கான நுழைவுச் சீட்டினை வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். நுழைவுச் சீட்டுடன் வராத விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஆ) எழுத்துத்தேர்வு பட்டப்படிப்பு நிலையிலான தரத்துடனும், கூட்டுறவு மேலாண்மை, கூட்டுறவு கடன் மற்றும் வங்கியியல், பொது அறிவு, அடிப்படைக் கணக்கியல், அடிப்படை கணினி அறிவு, கூட்டுறவுச் சட்டம் மற்றும் பொதுத் தமிழ் போன்ற பாடங்களை உள்ளடக்கியதாகவும் இருக்கும். எழுத்துத்தேர்வு கொள்குறி வகையில் (Objective Type) 200 வினாக்களுடன், 170 மதிப்பெண்களுக்கானதாகவும் தேர்வுக்கான கால அளவு 180 நிமிடங்கள் கொண்டதாகவும் இருக்கும். வினாத்தாள் ஆங்கிலம் மற்றும் தமிழில் அச்சடிக்கப்பட்டிருக்கும்.

இ) மேற்கண்ட எழுத்துத்தேர்வுக்குரிய பாடத்திட்டங்கள் (Syllabus) வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணைய தளத்தில் வெளியிடப்படும்.

ஈ) எழுத்துத்தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின் எழுத்துத்தேர்வுக்கான வினா விடைகள் (Key answers) வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலைய இணையதளத்தில் வெளியிடப்படும். வெளியிடப்பட்ட வினா விடைகள் ( Key answers) தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை இருந்தால் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு எழுத்துப் பூர்வமாக அல்லது இமெயில் மூலமாகத் தெரிவிக்க வேண்டும். வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையக் கூட்டத்தில் அது பரிசீலிக்கப்பட்டு உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

## 6. நேர்முகத் தேர்வு

1) எழுத்துத் தேர்வில் வெற்றி பெற்ற விண்ணப்பதாரர்கள் வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் நடத்தப்படும் நேர்முகத் தேர்வில் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும். விண்ணப்பதாரர்கள் எழுத்துத்தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி அடிப்படையிலும் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

2) நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளத் தகுதி பெற்ற நபர்களின் பெயர் பட்டியல் வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தின் இணையதளம் வழியாக வெளியிடப்படும்.

3) நேர்முகத் தேர்வு நடைபெறுவது தொடர்பான விவரங்கள் மின்னஞ்சல் ( e-mail) மூலம் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நேர்முகத் தேர்வு நடைபெறும் இடம், நாள், நேரம் ஆகிய விவரங்கள் அடங்கிய நேர்முகத் தேர்விற்கான அழைப்புக் கடிதங்களைத் தகுதி பெற்ற விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ள வேண்டும். அழைப்புக் கடிதத்துடன் வராத விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4) நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள வரும் விண்ணப்பதாரர்களிடம் அவர்கள் எந்த வகைச் சங்கத்திற்கு எந்த வரிசையில் ஒதுக்கீடு செய்யப்பட விரும்புகிறார்கள் என்ற முன்னுரிமை விருப்பம் (Option) பெறப்படும். நேர்முகத் தேர்வு முடிவடைந்த பின்னர், தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் போது விண்ணப்பதாரர்கள் தெரிவித்த முன்னுரிமை கவனத்தில் கொள்ளப்படும்.

5) எழுத்துத் தேர்வுக்கான மதிப்பெண் மற்றும் நேர்முக தேர்வுக்கான மதிப்பெண் முறையே 85:15 என்ற விகிதத்தில் இருக்கும்.

## 7. தெரிவு செய்யப்படும் முறை :

அ) விண்ணப்பதாரர்கள் எழுத்துத் தேர்விலும் நேர்முகத் தேர்விலும் பெற்ற ஒட்டுமொத்த மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு அரசாணைப்படியான இட ஒதுக்கீடு மற்றும் இனசுழற்சி முறை பின்பற்றப்பட்டு பணியிடத்திற்கு தெரிவு செய்யப்படுவார்கள்.

ஆ) ஆதிதிராவிடர், அருந்ததியர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /சீர்மரபினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (முஸ்லீம்) , ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் ஆகியோருக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களில் கொடுக்கும் வயது, கல்வித்தகுதி, கூட்டுறவு பயிற்சித் தகுதி, சமூகப் பிரிவு, சிறப்புத்தகுதிகள் மற்றும் பிற தகுதிகள் அனைத்தையும் சரிபார்த்த பின்னர், அவற்றைப் பெறத் தகுதி உடைய விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.

இ) வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் தேர்வு செய்யப்படும் நபர்களுக்குத் தெரிவு மற்றும் ஒதுக்கீடு ஆணை ( Selection and allotment order) வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் வழங்கப்படும். பணியமர்வு ஆணை ( Appointment order ) அந்தந்த சங்கத்தின் நிர்வாகத்தால் அல்லது உரிய அலுவலரால் வழங்கப்படும்.

ஈ) முன்னாள் இராணுவத்தின் வாரிசுதாரர்களுக்கு முன்னாள் இராணுவத்தினருக்கான இட ஒதுக்கீடு முறை பொருந்தாது.

உ) தெரிவு செய்யப்படும் மாற்றுத் திறனாளிகள், தங்களது குறைபாடு, தாங்கள் தெரிவு செய்யப்படும் பதவிகளுக்குரிய பொறுப்புகளை முழுத்திறனுடன் நிறைவேற்றுவதற்குத் தடையாக இருக்காது என்பதற்கான சான்றிதழை மருத்துவக் குழுவிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

**8. இதர நிபந்தனைகள்**

i)நேர்முகத் தேர்வில் கலந்துகொண்டு நிர்ணயிக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் பூர்த்தி செய்துள்ளார் என ஆள்சேர்ப்பு நிலையத்தால் தெரிவு செய்யப்பட்ட ஒரு விண்ணப்பதாரர் அப்பணிக்கென நிர்ணயிக்கப்பட்ட தகுதிகள் அனைத்தையும் முழுமையாகப் பெற்றிருக்கவில்லையென பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது தேர்வு வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்தால் இரத்து செய்யப்படும்.

ii) நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ளும் விண்ணப்பதாரர்களுக்கு அவ்வாறு நேர்முகத் தேர்வில் கலந்துகொள்ள அழைப்புக்கடிதம் அனுப்பப்பட்டதை மட்டுமே காரணமாக வைத்து பணி நியமனம் கோர உரிமை கிடையாது.

iii) மேற்படி பணியிடங்களுக்கான தேர்வு குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் இறுதித் தேர்வு முடிவு வெளியிடப்பட்ட 90 நாட்களுக்குள் வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத் தலைவரிடம் உரிய காரணங்களுடன் மேல்முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை கடைசி நேர மாறுதலுக்குட்பட்டது.

v) காரணம் எதுவும் தெரிவிக்காமல் இந்த அறிவிக்கையை இரத்து செய்வதற்கு / திரும்பப் பெறுவதற்கு / திருத்துவதற்கு / கெடு தேதியை நீட்டிப்பதற்கு வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திற்கு உரிமையுண்டு.

vi) விண்ணப்பதாரர்கள் அவர்களது சொந்த நலன் கருதி அவர்களது விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக "விண்ணப்பதாரர்களுக்கான அறிவுரைகளைக் கவனமாகப் படித்து தேர்வு செய்யப்படுவதற்குரிய நிபந்தனைகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.

vii)விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கு விண்ணப்பிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ள கடைசி நாள் வரை காத்திருக்காமல் அதற்கு முன்னரே போதிய கால அவகாசத்தில் விண்ணப்பிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். ஏனெனில் கடைசி நாளில் அதிகப்படியான விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க நேரும் போது, விண்ணப்பம் சமர்ப்பிப்பதில் தாமதமாகவோ அல்லது தொழில் நுட்பச் சிக்கல்களோ எழ வாய்ப்புள்ளது.

மேற்கூறிய தொழில்நுட்பக் காரணங்களால் அல்லது வேறு காரணங்களால், விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களைக் கடைசிக் கட்ட நாட்களில் சமர்ப்பிக்க இயலாது போனால் அதற்கு வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையம் பொறுப்பாகாது.

viii) விண்ணப்பத்தினைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மற்றும் நேரத்திற்குப் பிறகு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் செய்வதற்கான வசதி உடனடியாக நிறுத்தப்படும்.

ix) விண்ணப்பக் கட்டணம் செலுத்தியது தொடர்பான பிரச்சனை குறித்து ஏதேனும் முறையீடு செய்வதாயின் அப்பிரச்சனை ஏற்பட்ட 3 நாட்களுக்குள் வேலூர் மாவட்ட ஆள்சேர்ப்பு நிலையத்திடம் உரிய காரணங்களுடன் முறையீடு செய்ய வேண்டும். அதற்குப் பின் பெறப்படும் முறையீடுகள் ஏற்கப்படமாட்டாது.

x) கூடுதல் விவரங்கள் அல்லது சந்தேகங்களுக்கு **0416–2253092–**ல் உள்ள உதவி மையத்திலோ அல்லது velloredrb.coop@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியையோ தொடர்பு கொள்ளலாம்.

**இணைப்பதிவாளர்/தலைவர்,**
**கூட்டுறவுச் சங்கங்களின் வேலூர் மாவட்ட**
**ஆள்சேர்ப்பு நிலையம்,**
**வேலூர் மாவட்டம்.**